விவசாய விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவகம் - 2012

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 இலங்கை கணக்கீட்டுக் நியமம்

இலங்கை கணக்கீட்டுக் நியம இலக்கம் 16 இன் பிரகாரம் பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்டதன் பின்னர் பெறுமதி பூச்சியமாக இருந்த போதும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படுகின்ற ரூபா 75,532,817 பெறுமதியான 05 நிலையான சொத்து உருப்படிகள் மீள்மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கட்டிடமொன்றை புதுப்பிப்பதற்கான பெறுமதி கணக்கீடு செய்வதற்கு முன்னர் அதற்காக மதியுரைக் கட்டணமாகச் செலுத்திய ரூபா 267,937 ஆன முற்பணத் தொகையை நிதிக்கூற்றுக்களில் நிலையான சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது பெயர்ப்பலகைக்காக செலுத்தப்பட்ட ரூபா 175,000 நிதிக்கூற்றுக்களில் மூலதனச் செலவினத்தின் கீழ் கணக்கீடு செய்யப்படாமல் ஏனைய செலவினத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) 2012 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையின் பிரகாரம் கிடைக்க வேண்டிய பாடநெறிக் கட்டணம் ரூபா 31,364,000 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் அதன் பெறுமதி ரூபா 30,758,250 ஆக காண்பிக்கப்பட்ட காரணத்தால் ஆண்டிற்குரிய பாடநெறிக் கட்டணம் ரூபா 605,750 ஆல் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2008 மார்ச் 08 இல் உள்ளவாறு ரூபா 2,589,277 கிரயமான மோட்டார் வாகனமொன்று ரூபா 2,250,000 என மீள்மதிப்பீடு செய்யப்பட்டு அப்பெறுமதிக்கு இடையிலான வேறுபாடான ரூபா 339,277 தொகை 2011 ஆம் ஆண்டின் போது மோட்டார் வாகனக் கணக்கிற்கு இணக்கம் செய்யப்பட்டிருந்த போதும், அத்திகதியில் மோட்டார் வாகனங்களின் திரட்டிய பெறுமானத் தேய்வுப் பெறுமதியான ரூபா 2,429,548 ஐ கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2007 ஆம் ஆண்டிலிருந்து 2011 ஆம் ஆண்டு வரை கிடைக்க வேண்டிய பாடநெறிக் கட்டணம் மற்றும் பதிவுக்கட்டணம் ரூபா 57,343,541 கணக்குகளிலிருந்து விடுபட்டிருந்தன.

### 1.2.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த கீழே காண்பிக்கப்பட்டுள்ள கணக்கு விடயங்களுக்கு முன்னால் காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயங்கள் | தொகை<br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| காணியும் கட்டிடங்களும் | 65,308,307 | நிலையான சொத்துக்கள் பதிவேடு, பட்டோலைகள் மற்றும் மெய்மையாய்வு அறிக்கை |
| தளபாடங்களும் பொருத்திகளும் | 1,580,328 | - மேற்படி - |
| அலுவலக உபகரணங்கள் | 7,262,331 | - மேற்படி - |
| மோட்டார் வாகனங்கள் | 14,495,000 | - மேற்படி - |
| நூலகப் புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள் | 33,702,296 | - மேற்படி - |
| ஆய்வுகூட மற்றும் கற்பித்தல் உபகரணங்கள் | 44,488,869 | - மேற்படி - |
| | 166,837,131 | |

## 1.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கீழே காட்டப்பட்டுள்ள இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்புகள் | இணங்காமை |
|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 11 ஆம் பிரிவு | உரிய அமைச்சரின் அங்கீகாரத்துடனும் நிதி அமைச்சரின் இணக்கப்பாட்டுடனும் பணம் முதலீடு செய்யப்பட வேண்டிய போதிலும், நிறுவகத்தினால் மீளாய்வாண்டின் இறுதியில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 62,200,000 ஆன தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 188 | 2012 திசெம்பர் 31 இல் தயாரிக்கப்பட்ட வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் காண்பிக்கப்பட்ட வைப்புச் செய்யப்பட்டிருந்த போதும் தீர்வையாகாத ரூபா 17,070 பெறுமதியான 14 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் xiv ஆம் அத்தியாயத்தின் 28.5 மற்றும் 28.6 ஆம் பந்திகள் | 30 நாட்களுக்கு மேல் தாமதமாக சமர்ப்பிக்கப்பட்ட 14 பிரயாணச் செலவின விண்ணப்பங்களில் இருந்து ரூபா 16,856 ஆன தாமதக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) சுற்றறிக்கை | |
| (i) 2003 யூன் 02 ஆம் திகதிய PED/12 பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.2 ஆம் பந்தி | சிரேஷ்ட முகாமைத்துவக் குழுவொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை |

| | |
|---|---|
| (ii) 1990 ஒக்தோபர் 10 ஆம் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை/ பல்கலைக் கழகங்கள் தாபன விதிக்கோவையின் xxvii ஆம் அத்தியாயத்தின் 08 ஆம் பிரிவு | 06 மாதங்களுக்கு ஒரு முறை வாகனங்களில் எரிபொருள் நுகர்வு தொடர்பாக பரிசோதனை நடாத்தப்பட வேண்டிய போதிலும், நிறுவகத்திடம் காணப்பட்ட 04 வாகனங்கள் தொடர்பாக 03 ஆண்டு முதல் 16 ஆண்டுகள் வரை அந்தப் பரிசோதனை நடாத்தப்பட்டிருக்கவில்லை. |
| (iii) 1994 யூன் 14 ஆம் திகதிய 95(02) ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் 2003 சனவரி 29 ஆம் திகதிய PE 1/174/1-2003 ஆம் இலக்க நிதி அமைச்சின் சுற்றறிக்கை | பல்கலைக்கழகத்தின் கீழ் உள்ள நிறுவகங்களில் பணிபுரிவதற்காக கொடுப்பனவு களை மேற்கொள்ளும் போது அமைச்சரவை அல்லது பொது நிர்வாக அமைச்சு அல்லது திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும், அவ்வாறான அங்கீகாரமொன்று இல்லாமல் 2012 ஆம் ஆண்டின் போது குறுகியகால பாடநெறி கூட்டிணைப்புக் கொடுப்பனவுகள் விரிவுரை மற்றும் செயல்முறை பரிசோதனைக் கட்டணம் கொடுப்பனவுகள் என்பவற்றிற்காக 13 சந்தர்ப்பங்களில் ரூபா 417,000 தொகை செலுத்தப்பட்டிருந்தன. |

### 1.2.5 போதியளவான அதிகாரத்தினால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) 1978 மார்ச் 10 ஆம் திகதிய பீஈ/1/774/11 (ஆ) ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் விநியோகிக்கப்பட்டிருந்த சுற்றறிக்கை ஆலோசனைகளின் படி இரண்டாம் மூன்றாம் மொழித் தேர்ச்சிக் கொடுப்பனவாக 1996 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 1,275,179 செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2011 செப்தம்பர் 15 ஆம் திகதிய PED/58(2) ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் முகாமைத்துவ சபைக் கூட்டங்களுக்கு சமூகமளிப்பதற்காக நிறைவேற்று பணிப்பாளர் அல்லாத குழு உறுப்பினர்களுக்கு மாத்திரம் ரூபா 1,000 வீதம் கொடுப்பனவு செய்ய முடியுமான போதிலும், அந்த ஏற்பாடுகளுக்கு முரணாக 09 கல்விச்சபை செயலாளர்களுக்கு 2010 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரையில் மாதமொன்றுக்கு ரூபா 1,000 வீதம் 09 கல்விச்சபைகளுக்காக ரூபா 324,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக நிறுவகத்தின் செயற்பாடுகளிலிருந்து மீண்டெழும் செலவினத்திற்கான அரசாங்க மானியத்தைத் கருத்திற்கொள்வதற்கு முன்னர் ரூபா 5,871,268 ஆன மிகையொன்றாக இருந்ததுடன், மீண்டெழும் செலவினத்திற்காக ரூபா 15,400,000 ஆன அரசாங்க மானியத்தினை கணக்கில் எடுத்துக் கொண்டதன் பின்னர் அது ரூபா 21,271,268 ஆன மிகையாக அதிகரித்திருந்தது. முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவிற்கான அரசாங்க மானியத்தை கணக்கில் எடுத்துக்கொள்ள முன்னரான பற்றாக்குறை ரூபா 5,369,318 ஆக இருந்ததுடன், மீண்டெழும் செலவினத்திற்காகப் பெறப்பட்ட ரூபா 22,585,072 தொகையான அரசாங்க மானியத்தைக் கணக்கில் எடுத்ததன் பின்னர் இப்பற்றாக்குறை ரூபா 17,215,754 ஆன மிகையொன்றாக அதிகரித்திருந்தது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் மீண்டெழும் செலவினத்திற்கான அரசாங்க மானியத்தைத் கருத்திற் கொண்டதன் பின்னர் நிதி விளைவுகளில் ரூபா 4,055,514 ஆன மிகையில் அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

1975 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த விவசாய விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகம் அமைந்துள்ள காணியின் உரிமை பேராதனைப் பல்கலைக்கழகத்திடம் இருந்து வருவதுடன், அந்தக் காணியில் 2012 திசெம்பர் 31 வரையில் ரூபா 65,308,307 தொகை செலவிடப்பட்டு கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், காணியின் உரித்தை சட்டரீதியாக பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மை**

வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்காக 2012 மார்ச் 13 ஆம் திகதி நியமிக்கப்பட்ட தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரையின் பிரகாரம் ரூபா 7,950,000 ஆன வான் தனியார் நிறுவனமொன்றிடமிருந்து கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன், குறித்த வழங்குனரின் விலை கூறல் செல்லுபடிக்காலம் நிறைவு பெறுவதற்கு முன்னர் மீண்டும் பெற்றுக்கொள்ளப்பட்ட தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரையின் பிரகாரம் அந்த வாகனத்தை ரூபா 8,350,000 தொகைக்கு கொள்வனவு செய்த காரணத்தால் இணங்கப்பட்ட விலையை விட ரூபா 400,000 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**3.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்**

நிறுவகத்தின் பணிப்பாளரால் பயன்படுத்தப்படுகின்ற வாகனத்திற்குரிய மாதாந்த எரிபொருள் செலவினத்தை மீள்நிரப்புவதற்காக 02 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் அங்கீகரிக்கப்பட்டு ரூபா 29,643 பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன.

**3.4 நிதியத்தின் குறைப் பயன்பாடு**

03 வெளியக ஆய்வு நடவடிக்கைகளுக்காக 2010 சனவரி 01 ஆம் திகதி வரையில் நிறுவகத்திற்கு கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 653,318 ஆன பணம் எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் செயற்பாடற்று காணப்பட்டன.

**3.5 தாமதமான செயற்திட்டங்கள்**

நிறுவகத்தின் கணனி பயிற்சி நிலையத்திற்குள் நுழையும் மாணவர்களை இனங்காண்பதற்கும் பதவியணியினர் வருகை மற்றும் வெளிச்செல்லல் பதிவுகளை செய்வதற்காக இனங்காணும் அடையாள அட்டை முறைமையொன்றை தாபிப்பதற்காக 2010 யூன் 07 ஆம் திகதி ரூபா 216,092 ஆன முற்பணத் தொகையும், 2012 திசெம்பர் 31 ஆம் திகதி அதற்குரிய பகுதிக் கொடுப்பனவாக ரூபா 326,819 தொகையுமாக மொத்தம் ரூபா 542,911 செலுத்தப்பட்டிருந்த போதிலும், 2013 ஏப்ரல் மாதம் வரையில் அம்முறைமை தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.6 பதவியணி நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கல்விசார் பதவியணியில் வெற்றிடங்களின் எண்ணிக்கை 08 ஆக இருந்ததுடன், அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமல் வெளி விரிவுரையாளர்கள் சேர்க்கப்பட்டு, மீளாய்வாண்டில் ரூபா 15,246,638 தொகை விரிவுரைக் கட்டணமாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 09 ஆம் பந்தியின் பிரகாரம் மனித வளப் பாதீடு ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கொள்வனவுத் திட்டம்

மீளாய்வாண்டில் ரூபா 12,589,380 பெறுமதியான நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், அரச கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.2 வழிகாட்டியின் பிரகாரம் கொள்வனவுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 கல்விக் குழு

விவசாய விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் கட்டளையின் 14(7) உப பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு ஆண்டிலும் ஆகக்குறைந்தது 06 தடவைகளாவது கல்விக் குழுக் கூட்டத்தொடர்கள் நடாத்த வேண்டிய போதிலும், நிறுவகத்தில் செயற்படுகின்ற 07 கல்விக் குழுக்களானது 03 இற்கும் 05 இற்கும் இடைப்பட்ட கூட்டத் தொடர்கள் அளவில் நடாத்தப்பட்டிருந்தன.

### 4.3 உள்ளகக் கணக்காய்வு

மீளாய்வாண்டின் போது உள்ளகக் கணக்காய்வொன்று செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.4 கணக்காய்வுக்குழு

2003 யூன் 02 ஆம் திகதிய PED/12 பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வு குழு மூலம் தமது தீர்மானத்தை பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்காதிருந்ததுடன், கீழே காட்டப்பட்டுள்ள விடயங்கள் கணக்காய்வுக் குழுவின் விடயப் பரப்பிற்கு உட்படுத்தியிருக்கவில்லை.

(அ) உள்ளகக் கணக்காய்வு அலகின் பொறுப்புக்கள் குறிப்பாக கூறப்படாமை மற்றும் வருடாந்த கணக்காய்வுத் திட்டத்தை மீளாய்வு செய்யாமை

(ஆ) நிறுவகத்தினுள் செயற்படுத்தப்படுகின்ற சகல செயற்பாடுகளுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை மீளாய்வு செய்தலும் மதிப்பாய்வு செய்தலும்

(இ) வருடாந்த அறிக்கையில் உள்ளடக்குவதற்காக அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கை

(ஈ) பொது முயற்சிகள் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள்/ வழிகாட்டல் தொடர்பான மீளாய்வு

(உ) உள்ளகக் / வெளியக கணக்காய்வு அறிக்கைகள் முகாமைத்துவ கடிதங்கள் தொடர்பாக மீளாய்வும் தொடர் நடவடிக்கைகளும்

**4.5 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆம் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.4 ஆம் பிரிவின் பிரகாரம் வரைவுப் பாதீடு நிதியாண்டு ஆரம்பமாவதற்கு 03 மாதங்களுக்கு முன்னர் முகாமைத்துவ சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் வரைவுப் பாதீட்டிற்காக 2012 மார்ச் 30 ஆம் திகதி அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் செலவின மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட 12 செலவின விடயங்களுக்கு மதிப்பிடப்பட்ட செலவினத்தை மிகைத்து ரூபா 2,294,209 தொகை செலவிடப்பட்டிருந்தது. அவ்வாறே வருடாந்த பாதீட்டில் உள்ளடக்கப்படாத 02 செலவின விடயங்களுக்காக ரூபா 395,858 செலவிடப்பட்டிருந்தது. 02 செலவின விடயங்களுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 950,000 செலவு செய்யப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தன. பாதீடு செய்யப்பட்ட வருமானம் மற்றும் உள்ளவாறான வருமானம் என்பவற்றை ஒப்பிடும் போது 12 செலவின விடயங்களுக்குரிய மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 9,252,404 ஆல் அடையப்பட்டிருக்கவில்லை. 09 வருமான விடயங்களுக்காக மதிப்பிடப்பட்ட வருமானத்தை மிகைத்து ரூபா 13,390,089 சேகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிறுவகத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டிலான குறைபாடுகள் அவ்வப்போது எனது அறிக்கைகளின் மூலம் சுட்டிக் காட்டப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு

(இ) கொடுப்பனவுகள் மற்றும் முற்பணங்கள் தொடர்பான கட்டுப்பாடு

(ஈ) நூலகப் புத்தகங்களின் பாவனை